| 28-06-2024 | பொருள் எண்.40<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கணினிகள், பிரண்டர்களில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கம் செய்திட தேவையான மானிட்டர், மதர் போர்டு, ஹார்டு டிஸ்க், எஸ்.எம்.பி.எஸ், இராம்ப், மௌஸ், கிபோர்டு, யுபிஎஸ் பேட்டரி போன்ற வன்பொருட்கள் புதிதாக வாங்கி பொருத்தி நல்ல நிலையில் செயல்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2064/2024/இ1 | தீர்மானம் எண்.133<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.41<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் எண். TN-51-AD-3461-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளால் வாகனத்தை இயக்குவது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.1.45 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு:<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி வாகனத்தை ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2046/2024/இ1 | தீர்மானம் எண்.134<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.42<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாட்டு பணிகள் ரூ.6821.00 இலட்ச மதிப்பீட்டிலும் மற்றும் அம்ரூட் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.24596.00 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஆகையால் ஆங்காங்கே எதிர்பாராத விதமாக பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுறுத்தலின்படி கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகளை சீர்செய்வதற்கு முதற்கட்டமாக அருகாமையில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள இயந்திரங்களை ஒருங்கிணைத்து பணி மேற்கொள்ளவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகர்பகுதிகளில் பாதாள சாக்கடையினால் ஏற்பட்டுள்ள அடைப்புகளை நீக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் அறிவுறுத்தலின்படி Super Sucker இயந்திரத்தினை வாடகைக்கு பெற்று வருகின்ற வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக பணியினை மேற்கொள்ள முதற்கட்டமாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2064/2024/இ1 | தீர்மானம் எண்.135<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.43<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 24 வேதநாயகம் செட்டி தெருவில் மழைநீர் வடிகால் சேதமடைந்து உள்ளதால் சாலையில் மழைநீர் தேங்கி பொதுசுகாதார கேடு விளைவித்தும், பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதால் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு:<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.136<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/இ1 | |
| | பொருள் எண்.44<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் உரக்கிடங்கில் தேங்கியுள்ள திடக்கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கவும் மற்றும் அவ்வபோது எதிர்பாராத விதமாக உரக்கிடங்கில் ஏற்படும் தீ விபத்தினை தவிர்க்கும் பொருட்டும் பகுதியில் இரண்டு எண்ணிக்கையிலான ஆழ்துளை கிணறுகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/இ1 | தீர்மானம் எண்.137<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | | |
| 28–06–2024 | பொருள் எண்.45<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வெளிப்பாளையம் குடிநீர்தேக்க தொட்டி வளாகத்தில் குடிநீர் மின்மோட்டார்கள் வைப்பதற்கு பாதுகாப்பாக புதியதாக இரண்டு எண்ணிக்கையில் ஜிஐ சீட் மூலம் செட் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/இ1 | தீர்மானம் எண்.138<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.46<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குபட்ட பாதாள சாக்கடை Pumping station மற்றும் Lifting station ல் உள்ள பாதாள சாக்கடை கழிவுநீரை வெளியேற்றும் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சீரமைத்து பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.139<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2 | மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க.எண். /2024/இ1 | | | |
| 28–06–2024 | பொருள் எண்.47<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குபட்ட நீரேற்று நிலையங்கள், தரைமட்ட நீர் தேக்க தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சீரமைத்து பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | | | தீர்மானம் எண்.140<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 28–06–2024 | பொருள் எண்.48<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு குருக்கத்தி உந்து நிலையத்திலிருந்து சாலமன் நீர்த்தேக்க நிலையத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குழாய் வரும் வழித்தடங்களில் நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை ரயில்வே மேம்பால பணிகள் நடைபெற்று வருதால் பிரதான குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டு நேதாஜி சாலை அக்கரைக்குளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பழந்தெரு நகர் நல மையம் அமைந்துள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகள் பாதிக்கப்படுவதால் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சீர்செய்திடவும் மற்றும் அக்கரைக்குளம் பகுதியில் புதியதாக வால்வு தொட்டிகள் அமைத்து வால்வுகள் மாற்றிடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | | | தீர்மானம் எண்.141<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். /2024/இ1 | | | |
| 28–06–2024 | பொருள் எண்.49<br>நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் மேலகோட்டை வாசல் பம்பிங் ஸ்டேசனில் இயங்கி கொண்டிருந்த 35 HP Nonclog submercible Motor பழுதாகியுள்ளதை சீர்செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | | | தீர்மானம் எண்.142<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.50<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண். 36 டாடா நகர் பகுதியில்அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் நீரேற்றும் கிணறுகள் மற்றும் Manholeகளில் கசடு (Silt) படிந்துள்ளதால் கழிவு நீரேற்றும் பணி பாதிப்படைந்துள்ளது. அதனால் மேற்க்கண்ட கழிவுநீரேற்றும் கிணறுகள் மற்றும் Manholeகளில் படிந்துள்ள கசடுகளை அகற்றும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | | | தீர்மானம் எண்.143<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |

ந.க.எண்.        /2024/இ1

28-06-2024

பொருள் எண்.51

தீர்மானம் எண்.144
அ. கு
அனுமதிக்கப்பட்டது

இந்நகராட்சியில் உட்புறம் மற்றும் வெளிபுற அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள் இருப்பு இல்லாத நிலையில் நகராட்சி வருவாய் நிதியில் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.,49000/- இல் தருவித்துக்கொள்வதற்கு கடந்த 13.03.2024 ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு .

| வ. எண் | எழுதுபபொருள்களின் விவரம் | எண்ணம் | Rajan System Thanjavur 613001 | Bestech Computers Mannargudi 614001 | Opal Systems Thanjavur 613001 |
|---|---|---|---|---|---|
| 1 | Tnpl 80 gsm 4A Size Paper | 1 No | 300 | 320 | 350 |
| 2 | Tnpl 80 gsm Legal Size Paper | 1 No | 375 | 390 | 420 |
| 3 | Patron 925 Toner Cartidge | 1 No | 1200 | 1300 | 1250 |
| 4 | Patron 12 A Toner Cartidge | 1 No | 1100 | 1150 | 1250 |
| | | | (-) குறைவு | (+) அதிகம் | (+)அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1இல் கண்டுள்ள M/S Rajan System Thanjavur நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி விநியோக ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம், |
| | 3 | மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதை மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 1260/2022/எச்3

பொருள் எண்.52

நாகப்பட்டினம் நகராட்சிக்கான 2022-2023 ஆம் ஆண்டிற்கு இறுதி இருப்பு இணைக்கச்சான்றுகள் தயாரித்து உரிய அட்டவணைகள் மற்றும் பட்டியல்கள் தயாரித்து ஆண்டு கணக்குகள் இணையவழி மூலம் தயாரித்து கொடுத்தமைக்கு ரூ.40,000/-(ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) திருத்துறைப்பூண்டி திருமதி.எஸ்.ரம்யா என்பவர் வழங்கக்கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ.40,000/- திருமதி.எஸ்.ரம்யா என்பவருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |
|---|---|---|

ந.க.எண். 828/2020/பி1

பொருள் எண்.53

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பகுதியில் இயங்கிவரும் பாதாளசாக்கடை கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தில் கழிவுநீரின் தரத்தினை பரிசோதனை செய்ய OCEMS கருவி பொருத்தப்பட்டுள்ளது. அவை செயல்படுவதற்கு உண்டான Flow Meter பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | | |
| | பொருள் எண்.54<br>நாகப்பட்டினம் நகராட்சி வளாகத்தில் உள்ள சமூதாய கூடம் கட்டடப்பட்டு பல ஆண்டுகளாக உள்ளது. மேற்படி கட்டிடத்தில் நகராட்சி பகு'திக்கான சமூதாய அமைப்பாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மகளிர் சுய உதவிக்குழு தொடர்பாக பயிற்சிகள், கூட்டங்கள், மேற்படி கட்டித்தில் நடைபெற்று வருகின்றனர். இக்கட்டிடம் மிகவும் தேசம் அடைந்து பாதுகாப்பு இல்லாத நிலையில் எப்போது வேண்டுமானலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தை புதுப்பித்து தருமாறு கேட்டு வரப்பெற்ற நாகப்பட்டினம் நகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. | | தீர்மானம் எண்.145<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது<br><br>தீர்மானம் எண்.146<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது<br><br>தீர்மானம் எண்.147<br>அ. கு<br>அனுமதிக்கப்பட்டது |
| 28–06–2024 | பொருள் எண்.55<br>**.நகர்மன்ற உறுப்பினர் திருமதி..திவ்யா ரஞ்சித் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 1–வது வார்டுகுட்பட்ட சிவன்மேலமடவிளாகத்தில் தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் கல்வர்டு புதிதாக அமைத்து தரவும்,<br>➢ சிவன் மேலவீதி மற்றும் சிவன் வடக்கு வீதியிலும் கல்வர்டு புதிதாக அமைத்து தரவும்,<br>➢ சிவன் வடக்கு வீதி மற்றும் ஒத்தக்கம்மாளத்தெருவிலும், மழைநீர் வடிகால் புதிதாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | | தீர்மானம் எண்.148<br>அ.கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28-06-2024 | பொருள் எண்.56<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி..திவ்யா ரஞ்சித் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 1-வது வார்டுகுட்பட்ட நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனைக்கு புதியதாக கட்டடம் அமைக்க 15-வது நிதிக்குழு சுகாதார மானியம் 2023-2024-ன் கீழ் மேற்கொள்ள ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனையில் புதிய கட்டிடம் கட்டுவது தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் நடந்துகொண்டிருப்பதால், தற்போது இயங்கி வரும் நாகூர் அரசு மருத்துவமனையினை இடமாற்றம் செய்ய ஏதுவாக நகராட்சிக்கு கட்டுபாட்டில் இயங்கிவரும் யாத்திரிக் நிவாஸ் என்ற இடத்திற்கு தற்காலிகமாக மருத்துவமனை இயங்குவதற்கு மாற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கு வழிவகை செய்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.149<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.57<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி..எஸ்.பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 2-வது வார்டுகுட்பட்ட நாகூர் தர்கா, அழுங்காரவாசல் பெரியகடைத்தெரு சாலை , கைலி கடைத்தெரு சாலை மற்றும் செய்யதுபள்ளி சாலை ஆகிய தார்சாலைகள் மிக மோசமான நிலையில் உள்ளது, மழை பெய்தால் போக்குவரத்து பாதையில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. மேற்கண்ட தார் சாலையை முறையாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.150<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.58<br>**நகர்மன்ற துணைத்தலைவர் திரு.M.R.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 7-வது வார்டுகுட்பட்ட பெருமாள் கீழவீதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளி முகப்பில் இப்பள்ளியில் படிக்கும் சுமார் 300 மாணவர்கள் தினந்தோறும் காலையில் நடைபெறும் பள்ளியின் இறை வணக்கம் நிகழ்ச்சி நடைபெறும் நிகழ்வில் வெயில் மழை காலங்களில் மிகவும் சிரமப்படுவதால், இப்பள்ளியின் முகப்பில் மேற்கூரை தகரசெட் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.151<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.59<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.M.தியாகு (எ) தியகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 8-வது வார்டுகுட்பட்ட கிரிஸ்தவர்கள் புதைக்கும் சுடுகாடு கடந்த 60 ஆண்டுகளாக சுற்று சுவர் இல்லாமல் உள்ளது. எனவே சுற்றுசுவர் அமைக்க அனுமதி வழங்கியும் சுற்று சுவர் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.152<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28-06-2024 | பொருள் எண்.60<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.ஜீலைகாபீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 14-வது வார்டுகுட்பட்ட புதிய நம்பியார் நகர், பச்சைப்பிள்ளையார் கோவில் தெரு நாடார் குளம் சாலை, சவேரியார் கோவில் தெரு, காடம்பாடி மாரியம்மன் கோவில்தெரு, என்,ஜீ,ஓ, காலனி ஆகிய சாலைகளிலும் குடியிருப்பு பகுதிகளிலும் கருவை மரங்கள் வளர்ந்து சாலையில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது, மேலும் பள்ளி திறப்பு இருப்பதால் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பாம்பு போன்ற விஷ சந்துக்களால் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது, ஆகையால் அனைத்து தெருக்களிலும் இடையூராக உள்ள கருவை மரங்களை அகற்றி தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.<br>➢ | தீர்மானம் எண்.153<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.61<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.ஜீலைகாபீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 14-வது வார்டுகுட்பட்ட பாதாள சாக்கடை தொட்டிகள் இதுவரை நகராட்சியால் உயர்த்தி தரப்படவில்லை அனைத்து தொட்டிகளும் இரண்டரை அடி ஆழத்தில் உள்ளதால் அடைப்புகளை சரிசெய்வதில் பெரும் சிரமமாக உள்ளது, அதைவிட நடந்து செல்வவோரும் இருசக்கர வாகனத்தில் செல்வோரும் பாதாளசாக்கடை தொட்டி பள்ளத்தில் விழுந்து காயம் அடைகின்றனர், ஆகையால் தொட்டிகள் அனைத்தையும் உயர்த்தி தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.154<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.62<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.ஜீலைகாபீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 14-வது வார்டுகுட்பட்ட நாடார் குள சாலையில் உள்ள சிறுபாலம் உடைந்து பள்ளி வாகனங்களும், அப்பகுதியில் வாழும் சுனாமி குடியிருப்பு வாசிகளும் மற்றும் பொது மக்களும் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகையால் அவசர அவசியமாக அப்பாலத்தை புதியதாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.155<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.63<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.ஜீலைகாபீவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 14-வது வார்டுகுட்பட்ட சவேரியார் கோவில் தெருவில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் பள்ளியான புனிததோமையார் பள்ளியின் சமையல் கூடம் மற்றும் அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதை புதிப்பித்து தரவும்,<br>➢ நாடார்குள சாலையில் உள்ள பழுதடைந்துள்ள சிறுபாலத்தை புதியதாக அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.156<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.64<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு P. திலகர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 17-வது வார்டுகுட்பட்ட பகுதியில் AMRUT -2.0 திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. இதில் நண்டுகுளரோடு, இரயில்வே லைன்மேல்புறம், நண்டுகுளரோடு, தென்சந்து உட்பகுதி, நண்டுகுளம் ரோடு வடக்கு சந்து, (அம்மு மெஸ் எதிர்) , ரயிலடிதெரு வடக்கு சந்து, குப்பாச்சி தோட்டம் கிழக்கு சந்து, ஏழைப்பிள்ளையார் கோவில் தெரு, ஓம்சக்தி கோவில் சந்து, ஏழைப்பிள்ளையார் கோவில்தெரு, கிழக்கு முதல் சந்து ஆகிய பகுதிகளில் இடம் பெறவில்லை, எனவே இப்பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.157<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28-06-2024 | பொருள் எண்.65<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி. த.செல்வராணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 19-வது வார்டுகுட்பட்ட ராமர்மடத்தெரு, தாமோதர நாயுடு தெரு மற்றும் சங்கரவிநாயகர் கோவில் தெருவில் சிறுபாலங்கள் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.158<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.66<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி,.G,சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 20-வது வார்டுகுட்பட்ட சிவன் கோயிலில் உள்ள திருக்குளம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதை தூர்வாரி சுற்றுச்சுவர் அமைத்து தரவும்,<br>➢ பெருமாள் கோவில் வடக்குத்தெருவில் குடிநீர் குழாய் இணைப்பு வேலை முழுவதும் முடிந்துவீட்டது. இந்த தெரு மேடு பள்ளமுமாக மிகவும் மோசமாக உள்ளது. ஆகையால் அந்த தெருவில் ரோடு அமைத்து தரவும்,<br>➢ நாகப்பட்டினம் வெளிப்பாளையம் சுடுகாடு செல்லும் சாலையில் வடிகால் அமைத்து தரவும், வெளிப்பாளையம் பகுதிகளில் உள்ள தண்ணீர் இந்த சுடுகாடு சாலையில் அமைந்துள்ள இந்த வடிகால் வழியாகத்தான் செல்கிறது. வடிகால் அடைப்பு ஏற்பட்டுள்தால், தண்ணீர் செல்ல வழியில்லாமல் நடுரோட்டில் ஓடுகிறது. மழைக்காலம் வருவதற்கு முன் அந்த வடிகாலை சரிசெய்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.159<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.67<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா. கால அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 23-வது வார்டுகுட்பட்ட கூக்ஸ் நகர் பகுதியில் 700-க்கு மேற்பட்ட குடிசை பகுதியில் மக்கள் வசித்து வருகின்றன, இந்த பகுதியில் மழைகாலங்களில் மேற்கு பகுதியில் உள்ள மழைநீர் அனைத்தும் கூக்ஸ் நகர் பகுதியில் உள்ள சர்வே எண். 1222/14/அ1 என்ற இடத்தின் வழியாக தான் மழைநீர் முழுவதும் வடிகால் வழியாக ரயில்வே கீழ் பாலம் வழியாக கடலுக்கு செல்கிறது, இந்த பகுதியில் மழை காலங்களில் வெள்ள அபாயம் இல்லாமல் நிரந்தர வடிகால் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.160<br>அ,கு,<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.68<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2025 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**<br>வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் - (1) அட்டவணைகள் I, II, III -ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி | தீர்மானம் எண்.161<br>அ,கு,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது. அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், மன்னார்குடி நகராட்சி நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும். தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று. உரிமம் விண்ணபிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும். அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 –இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும். அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணபிக்கவேண்டும். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும்.<br>உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்பிக்கப்படும் போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது. அட்டவணை I, II, III, மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 ந் தேதி முதல் அமுலுக்கு வரும். உரிமம் பெறாமலோ அல்லது புதுப்பிக்காமலோ தொழில் புரிவோரின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 114 A ன் படி நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>**குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.**<br>**அட்டவணை I**<br>**[ See rules 289(1), (2) and (5)]**<br>**1. பொருந்தக்கூடிய தன்மை :**<br>1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.<br>**2. உரிமக்கட்டணம் :**<br>குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் | |

வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும். விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GST எண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும். ஆ. விண்ணபத்தாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, **படிவம் 17** ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

**(a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3,500/- |

**(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5,000/- |

**(c) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10,000/- |

**(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/- | 35,000/- |

**வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப் படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற் சாலை எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப் படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1600 | 3750 | 7750 | 10500 |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள்(மின் மோட்டர்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை | 2000 | 4000 | 9000 | 12000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உற்பத்தி செய்தல் | | | | |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 15 | செங்கல் சூளைகள் | 1750 | 3750 | 8000 | 11000 |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைத உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 2000 | 4000 | 9000 | 12000 |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 26 | காற்றுப் பதனிகளை | 2000 | 4000 | 9000 | 12000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உற்பத்தி செய்தல் | | | | |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 36 | துப்பரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1600 | 3750 | 7750 | 10500 |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500 | 5000 | 10000 | 12500 |
| 41 | அனைத்து வகையான மர/பிளைவுட்/சன் மைக்கா பொருட்களை | 2000 | 4000 | 9000 | 12000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உற்பத்தி செய்தல் | | | | |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2000 | 4000 | 9000 | 12000 |
| 49 | உரிமம் பெற்று தயாரிப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும் என்று நகராட்சி கருதும் மேற்குறிப்பிட்ட இனங்கனள தவிர இதர இனங்கள் | 2000 | 4000 | 9000 | 12000 |

**அட்டவணை II**

**[See rules 289 (1),(2) and (5)]**

1. **பொருந்தும் தன்மை:**
   (1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.
2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:–
   1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.
   2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்.
   3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.
   4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934 –ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு

ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள்

5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

1. **உரிமக் கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| **நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்** | **குறைந்த பட்ச கட்டணம் (ரூ)** | **அதிக பட்ச கட்டணம் (ரூ)** |
|---|---|---|
| **(1)** | **(2)** | **(3)** |
| நகராட்சி மன்றம் | 700/– | 10,000/– |

2. **வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல்** :

| **வ. எண்** | **வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல்** | **01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சர்வீஸ் மையங்கள் | 1000 |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை விற்பனை செய்தல் | 1500 |
| 8 | கழிவுத்தாள் கடை/பழைய வேண்டாத பொருட்கள் | 2000 |
| 9 | நூற்பு வேலைகள் | 1000 |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 1000 |
| 12 | காற்றமுத்திகள் (Air Compressors) | 750 |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 14 | எடை இயந்திர நிலையங்கள்(Weighing Machines) | 1000 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 750 |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 2000 |
| 17 | தலைக்கவச கடைகள் | 1500 |

| | | |
|---|---|---|
| 18 | இரு சக்கர வாகனகங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 1500 |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 2000 |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 1500 |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங் களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 32 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 34 | அனைத்து வகையான வீட்டுஉபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சமான்கள்) | 750 |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 |
| 40 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 42 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 43 | அனைத்து வகையான மர / ப்ளைவுட்/ சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 1000 |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1500 |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 50 | அழைப்பிதழ்கள்/வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1500 |
| 51 | மருந்துக்கடைகள் | 1000 |
| 52 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 53 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 54 | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 55 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750 |
| 56 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 1500 |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 5000 |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 1000 |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 5000 |
| 62 | பார்சல் புக் செய்யுமிடங்கள்/ தூதஞ்சல் (Courier) | 1000 |

| | | |
|---|---|---|
| | சேவைகள் | |
| 63 | கேபிள் டி.வி சேவைகள் | 2000 |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 1000 |
| 66 | பட்டாணி வறுவல் | 750 |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 1000 |
| 68 | பஞ்சு மெத்தை/தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 750 |
| 70 | பல்பொருள் அங்காடி | 5000 |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 1000 |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 1000 |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 750 |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 1000 |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000 |
| 76 | பொற்கொல்லர்கள் | 750 |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 1500 |
| 78 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 80 | முடி வெட்டும் நிலையங்கள் | 1000 |
| 81 | அழகு நிலையங்கள் /தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத /ஸ்பாஸ் (Spa's) | 2000 |
| 82 | தையல் கடைகள் | 1000 |
| 83 | சலவையகங்கள் | 1000 |
| 84 | வினைல் போர்டு கடைகள் | 1000 |
| 85 | காலணி கடைகள் | 1000 |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 1000 |
| 87 | மிதி வண்டி மற்றும் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 1000 |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 1000 |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 5000 |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 1000 |
| 91 | அச்சகங்கள் | 1000 |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 1000 |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |

| | | |
|---|---|---|
| 95 | நெல் அவித்தல் | 1000 |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 1000 |
| 97 | FCS ஆலைகள்(Farm and commercial Storage Manufacturing) | 1000 |
| 98 | அரிசி ஆலைகள் | 2000 |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 100 | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 101 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 102 | கோழி இறைச்சி /ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000 |
| 103 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | – |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 1000 |
| 106 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 107 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 108 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 109 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 110 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 111 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000 |
| 112 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000 |
| 113 | அனைத்து வகையான கால்நடைகள்/பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 114 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000 |
| 115 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 116 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 117 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 118 | பேக்கரிகள் | 1500 |
| 119 | பழச்சாறு கடைகள் | 1000 |
| 120 | AMF (Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 1000 |
| 121 | நீர்வாழ்வன காட்சிசாலை(Aquarium) | 1000 |
| 122 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 123 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 1000 |
| 124 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 2000 |
| 125 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 1000 |
| 126 | உரிமம் பெற்று வர்த்தகம் செய்ய வேண்டுமென நகராட்சி கருதும் மேற்குறிப்பிட்ட இனங்களை தவிர இதர இனங்கள் | 750 |

**SCHEDULE III**

**[See rules 289 (1), (2) and (7)]**

(1) **பொருந்தும் தன்மை :–** இந்த அட்டவணை, –

**(1)** தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

**(2)** 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக்சகூட்டங்களாகப் பயன்படுதப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கம் பொருந்தும்.

2) உரிம கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):

(i) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.15000/–

(**ஒரு வருடத்திற்கான கட்டணம்**):

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். | சிற்றுண்டிச்சாலைக்கு –1200/– உணவகம் , உணவுக்கூடங்களுக்கு – 2500/– |

**(ii) 2014–ம்** ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழுங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.**1500/–** அதிகப்பட்ச கட்டணம் **– ரூ.3500/–**

(**ஒரு வருடத்திற்கான கட்டணம்**):

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 2000/– |

**(iii) 1939–ம்** ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் விதிகளில்

அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/- அதிகப்பட்ச கட்டணம் - ரூ.30000/-

(**ஒரு வருடத்திற்கான கட்டணம்**):

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | 5000/- |

**(iv)** திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/- அதிகப்பட்ச கட்டணம் - ரூ.30000/-

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் | 5000/- |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | 2500/- |

**SCHEDULE IV**

**[See rules 282 (11) and 286 (2)]**

**(i) தனியார் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் உறைவிடம் (Shelter)**

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கட்டணம் ரூபாயில் | விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிக பட்சக் கட்டணம் ரூபாயில் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| நகராட்சி மன்றம் | 2000/- | 30,000/- | 2500/- |

**(ii) தனியார் இறைச்சிக் கொட்டில்கள்**

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கட்டணம் ரூபாயில் | விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிக பட்சக் கட்டணம் ரூபாயில் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| நகராட்சி மன்றம் | 2000/- | 20,000/- | 5000/- |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.04.2025- ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயம்உரிமக்கட்டணங்க கட்டணங்களை மன்றம் பரிசீலித்த நிர்ணயம் செய்யலாம். |

தீர்மானம் எண்.162
அ,கு,
அனுமதிக்கப்பட்டது

ந.க.எண். /2024/எச்1

பொருள் எண்.69

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் நீர்நிலைகள், கழிவு நீர் வாய்க்கால்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களில் பொதுசுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் மற்றும் பொதுமக்களுக்கு தொல்லையாக உள்ள சீமைக்கருவேலை மரங்கள் ( வேலிக்கருவேலைகள், முள் / மரம் ) நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குள் வார்டு 1 முதல் 36 வார்டு பகுதிகளில் உள்ளதால் மேற்படி வேலி கருவேலை மரங்கள் அகற்ற தேவையான JCB நகராட்சியில் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் புதிதாக JCB வாடகைக்கு அமர்த்தி நகராட்சி பகுதிகளில் உள்ள சீமைக்கருவேலை மரங்களை அகற்றவதற்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |

பொருள் எண்.70

நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 36 வார்டு பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் எண்ணிக்கை விபரம் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மூலம் கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு சர்வே எடுக்கப்பட்டு 728 நாய்கள் என கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு ஏதுவாக அறுவை சிகிச்சை அறையில் A/C பிரிட்ஸ் மற்றும் இதர உபகரணங்கள் பொறுத்துவதற்கும் அறுவை சிகிச்சை அளிக்கும் விலங்குகள் நலவாரியத்தில் ( Animal Welfare Board ) பதிவு பெற்ற அமைப்புகள் மூலம் அறுவை சிகிச்சை செய்ய தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடிப்பதற்கு நாய் ஒன்றுக்கு ரூ.200/- வீதமும் அறுவை சிகிச்சை உணவு மற்றும் தடுப்பு ஊசி போன்ற செலவினத்திற்கு ரூ.1450/- என மொத்தம் நாய் ஒன்றுக்கு 1650/- வீதம் 728 நாய்களுக்கு ரூ.12.00 இலட்சமும் அறுவை சிகிச்சை கூடத்தில் உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண்.163
அ,கு,
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 2141 /2020/எச்1

28-06-2024

பொருள் எண்.71

நாகப்பட்டினம் நகராட்சியின் பொதுசுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ், நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தூய்மைப்பணிகள் நடைபெற்று வருகிறது.அவ்வாறு தூய்மைப்பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பு நிதியாண்டிற்கு ( 2024-2025 ஆம் நிதியாண்டு) தேவையான பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, விளம்பரக்கட்டணம் மற்றும் இ,தர தளவாடப்பொருள்கள் ரூ.20.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டுத்தொகையில் தருவித்து கொள்வதற்கும், உத்தேச செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் எண்.164
அ,கு,
அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | ந.க.எண். /2024/எச்1 | | | |
| 28-06-2024 | பொருள் எண்.72<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.H.முகம்மதுசேக்தாவூது(எ)அமான் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 3-வது வார்டுகுட்பட்ட தெருப்பள்ளிதெரு, மெய்தீன்பள்ளிதெரு முகப்பு கல்வெட் சேதமடைந்து கழிவுநீர் சாலையில் செல்வதால், புதிய கல்வெட் சாலை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | | | தீர்மானம் எண்.165<br>அ,கு,<br>தீர்மாணிக்கபட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.73<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.N.அஞ்சலிதேவி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 4-வது வார்டு மியாத் தெருவில் உள்ள தார் சாலையானது மிகவும் சிதிலமடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. எனவே இச்சாலையை பயன்படுத்தும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே நாகூர் தேரடியிருந்து ரயில்வே சுரங்க நடைப்பாதை வரை உள்ள மியாத் தெருவில் புதிதாக தார் சாலை அமைத்து தரவும்,<br>➢ பண்டகாசலை தெருவில் உள்ள தார் சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத சூழலில் உள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாகின்றனர். எனவே பண்டகசாலை தெருவில் புதிதாக தார் சாலை அமைத்து தரவும்.<br>➢ காட்டுபள்ளி குளத்தெரு குளத்தின் கிழக்கு திசையில் உள்ள கான்கிரிட் சிமெண்ட் சாலையானது மிகவும் தேசமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது, எனவே புதிதாக தார் சாலை அமைத்து தரவும்,<br>➢ பண்டகசாலை தெருவில் உள்ள பாதாள சாக்கடைகளில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு சாக்கடை நீரானது மேனுஹோல் மூலம் நிரம்பி வழிந்து அடிக்கடி சாலைகளில் வழிந்து ஓடுகிறது. எனவே அப்பகுதியில் வாழும் மக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பண்டகசாலை தெருவில் உள்ள மேனுவல்களை தூர்வாரி சாக்கடை நீர் தேங்காமல் சீராக செல்வதற்கு நடவடிக்கை எடுக்க இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | | | தீர்மானம் எண்.166<br>அ,கு,<br>தீர்மாணிக்கபட்டது |
| 28-06-2024 | பொருள் எண்.74<br>**நகர்மன்ற துணைத்தலைவர் திரு.M.R. செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்-**<br>➢ 7-வது வார்டுகுட்பட்ட மாப்பிள்ளைத்தெரு பவித்ரா கார்டன் பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்து தரவும்,<br>➢ வண்ணாரத்தெரு புதுசாலை ரோடு சந்து பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | | | தீர்மானம் எண்.167<br>அ,கு,<br>தீர்மாணிக்கபட்டது |

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்